(இ) ஆதி திராவிடர் குடியிருப்புகளில் உள்ள திருக்கோயில்கள் திருப்பணிக்கு நிதியுதவி தொடர்பான இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

1. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இல்லாத, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள 1,000 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள ஏதுவாக, நடப்பாண்டு திருக்கோயில் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 10 கோடி ரூபாய் நிதியுதவி திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் உள்ள நிதி வசதி இல்லாத 1,000 கிராமப்புற திருக்கோயில்களில் திருப்பணி மற்றும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக, நடப்பாண்டு திருக்கோயில் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 10 கோடி ரூபாய் நிதியுதவி திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்படும் என்று கூறி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11—55

4. கைத்தறி மற்றும் துணிநூல் துறை, வேளாண்மைத் துறை மற்றும் இந்து சமய அறநிலையங்கள் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம்'; இது தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் உறுதி செய்யப்பட்டு வருகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் நெசவாளப் பெருமக்களுக்கு நெசவுக் கூலி உயர்வையும், அகவிலைப் படி உயர்வையும், பெடல் தறி நெசவாளப் பெருமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று கூலி உயர்வையும், பள்ளிச் சீருடை நெசவாளப் பெருமக்களுக்கு*

2019 ஜூலை 16] [திரு. ஓ.எஸ். மணியன்]

கூலி உயர்வையும், வட்டி மானியத்தை 4 சதவிகிதத்திலிருந்து 6 சதவிகிதமாகவும் உவகையோடு அளித்து நெசவாளப் பெருமக்களின் வாழ்க்கையில் நம்பிக்கை ஒளியேற்றியிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேவேளையில் ஒரே நேரத்தில், ஒரே அறிவிப்பில் அனைத்து நெசவாளப் பெருமக்களுக்கும் கூலி உயர்வை அறிவித்திருப்பவர் மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதை பணிவோடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவின் வழியே தன் வழி, அன்னையின் கட்டளைகளே சாசனம், மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனக் கருதி விவசாயிகள் வாழ்வில் குலவிளக்கேற்றி விளைநிலம் கொழிக்கவும், விவசாயம் செழிக்கவும் வித்திட்ட சேலம் தந்த கொங்குநாட்டுத் தங்கம், எங்களுடைய பாசமிகு தமிழக முதல்வர் அவர்கள் இன்றைக்கு விவசாயிகள் வாழ்வு சிறக்க அல்லும்பகலும் அயராது உழைத்து, தனது சிந்தனையில் உதித்த சீர்மிகு எண்ணங்களை திட்டங்களாக்கி வேளாண்மை செழிக்கவும், உழவர்கள் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் முத்தான 16 திட்டங்களை 1,068 கோடியே 85 இலட்சம் மதிப்பில் அறிவித்து, தமிழக விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பிலும், எனது தரப்பிலும் கோடானுகோடி நன்றிகளை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அமைதி, வளம், வளர்ச்சி' என்கிற மாண்புமிகு அம்மா அவர்களின் தாரக மந்திரத்தை தன்னுள் ஏற்று மாண்புமிகு*

அம்மா அவர்களின் வழியில் ஆட்சி நடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 2019–2020 ஆம் ஆண்டில் இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள 1,000 திருக்கோயில்களில் திருப்பணிகளை மேற்கொள்ள ஏதுவாக திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.1 இலட்சம் வீதம் ரூ.10 கோடி நிதியுதவி மற்றும் கிராமப் பகுதிகளிலுள்ள கிராம கோயில்களின் அன்றாட வழிபாடு தடையில்லாமல் நடைபெறுவதற்காக 2019–2020 ஆம் ஆண்டில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள நிதி வசதியில்லாத 1,000 கிராமப்புற திருக்கோயில்களில் திருப்பணி மற்றும் புனரமைப்புப் பணி செய்வதற்கு ஏதுவாக திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.1 இலட்சம் வீதம் ரூ.10 கோடி நிதியுதவி என முத்தான 2 அறிவிப்புகளை விதி 110–ன்கீழ் அறிவித்த, அரவணைத்து தமிழ்நாட்டைக் காத்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இந்து சமய அறநிலையத் துறை சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றி மலர்களை காணிக்கையாக்குகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

5. அறிவிப்புகள்

(அ) திரு. எஸ்.எஸ். இராமசாமி படையாட்சியார் திருவுருவப் படம் 19–7–2019 அன்று சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் திறந்து வைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இந்திய விடுதலை போராட்ட வீரரும், உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பதவி வகித்தவரும், மேலவை, மக்களவை உறுப்பினராகப் பணியாற்றியவரும், சமுதாயத்தில் நலிந்த பிரிவு மக்களின் முன்னேற்றத்திற்காகவும், மேன்மைக்காகவும் தன் வாழ்நாளை அர்ப்பணித்து சேவை புரிந்த பெருமகனாகவும் திகழ்ந்த திரு. எஸ்.எஸ். இராமசாமி படையாச்சியார் அவர்களுடைய திருவுருவப் படத்தினை தமிழ்நாடு சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய தலைமையிலே மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய முன்னிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 19–7–2019 வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் 5–30 மணிக்கு திறந்துவைக்க உள்ளார்கள் என்கிற மகிழ்ச்சியான செய்தியினை இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) விழாவிற்கான அழைப்பிதழ் இன்று*